விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 288 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 16 புதன்கிழமை (02.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஈழத் தமிழர்களின் அபிலாசைகளை
# கரிசனையோடு அணுகுங்கள்



### ஜனாதிபதியிடம் சிறீதரன் கோரிக்கை

(கொழும்பு) ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கரிசனையோடு அணுகுங்கள் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - ரஷ்ய உறவு மேலும் வலுவடையும்
### அநுரவுக்கான வாழ்த்தில் விளாடிமிர் புடின்



(கொழும்பு)
ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இலங்கை - ரஷ்ய இரு 15

### வரவு செலவுத் திட்டம் மூலம்
## அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)
அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் 02

### அநுரவின் தலைமை
## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும்
### ஆசிய அபிவிருத்தி வங்கி

(கொழும்பு)
ஜனாதிபதி அநுரவின் தலைமை இலங்கையின் பொருளாதாரத்தை 15



சிறுவர் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் தமிழர் தாயகத்தில் போராட்டம் நடத்தப்பட்டபோது...

### பிணை முறி மோசடி விசாரணை ஆரம்பம்
# ரணிலை நீதிமன்றில் முன்நிறுத்த முடியும்
### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



- புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சி.
- ஈஸ்டர் தாக்குதல் விசாரணை ஆரம்பம்.
- புதிய அமைச்சரவையில் 25 உறுப்பினர்களுக்கு மேல் இருக்காது.
- சர்வஜன வாக்கெடுப்புக்காக புதிய அரசமைப்பு மக்கள் முன் சமர்ப்பிக்கப்படும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை
### நவம்பர் 25 - டிசம்பர் 20

(கொழும்பு)
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த சாதாரண தரப் பரீட்சையை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கே 15


### வவுனியாவில் உறவுகளின் போராட்டத்தில்
## ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி அச்சுறுத்தல் விடுத்தவரால் குழப்பம்



(வவுனியா)
வவுனியாவில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தில் ஜனாதிபதி அநுரவின் பெயரைப் பயன்படுத்தி அச்சுறுத்தல் விடுத்த நபரால் குழப்ப நிலை ஏற்பட்டது.

உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு, வவுனியாவில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா 15

### தமிழ் மக்களை அங்கீகரித்தால்
## ஜனாதிபதியுடன் இணைந்து பயணிக்கத் தயார் - சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
புதிய ஜனாதிபதியின் போக்கு திருப்திகரமாக இருக்கிறது. அவர் தமிழ் மக்களை அங்கீகரித்துச் செயற்பட்டால், அவருடன் இணைந்து பயணிப்போம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 15

## பேருந்து கட்டணத்தை குறைக்க நடவடிக்கை
### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

07ஆம் பக்கம் பார்க்க

### ஐ.எம்.எப் பிரதிநிதிகளிடம்
## அடிப்படை விடயங்கள் மட்டுமே கலந்துரையாடப்படும்
### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் அடிப்படை விடயங்கள் மாத்திரமே கலந்துரையாடப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராமரிப்பாளர் தேவை

வயோதிபப் பெண்மணி ஒருவரை பராமரிப்பதற்கும் ஏனைய சிறு வீட்டுப் பணிகளுக்கும் ஆரோக்கியமான பெண் பணியாளர் தேவை. தங்கி நின்றுபணி செய்தல் விரும்பப்படும். சம்பளம் ரூபா 45,000 உணவு, தங்குமிடம், ஏனைய வசதிகள் செய்துதரப்படும் நேரடியாக தொடர்பு கொள்ளவும் தரகர்கள் தேவையில்லை

இடம்: நெல்லியடி, வடமராட்சி

(C-1319)

**075 484 71 71**

## 9A COLLEGE
## O/L DAY CLASS &

தரம் 06 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்கள்

ஆரம்பம் : 03.10.2024

வியாழக்கிழமை

இடம் : உயர்கல்லூரி வளாகம் - 2 ஆம் மாடி ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

T.P : 076 187 9502

(2166)



## பொதுக் கூட்டம் பிற்போடுதல் தொடர்பானது

மேற்படி விடயம் தொடர்பாக 14.11.2024ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளமையினால் 05.10.2024 ஆம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுச் சபைக்கூட்டமானது 01.10.2024 ஆம் திகதிய பிரதேசசெயலாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக பிற்போடப்பட்டுள்ளது என்பதுடன் மீளவும் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்,
நோயாளர் நலன்புரிச்சங்கம்,
மாவட்டப் பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

(C-1320)

# மரண அறிவித்தல்



பிறப்பு 15 - 10 - 1948

இறப்பு 01 - 10 - 2024

## நல்லையா பூரணம்

(ஓய்வுபெற்ற ஊழியர் – திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பூரணம் அவர்கள் 01.10.2024 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஐயன் - சின்னன் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் சறோஜினி(பதில் விடுதி லிகிதர் - யாழ். போதனா வைத்தியசாலை), சதீஸ்குமார்(கனடா) மற்றும் காலஞ்சென்ற நதீஸ்குமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவீந்திரன் (பரிசாரகர் - யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீபிரியா(கனடா), நுதாசினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் யோசலா(பல்கலைக்கழக மாணவி - கிளிநொச்சி), அபிநாத்(லண்டன்), சேழினி(உயர்தர மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நிவேதா, றுபிஷன், பிஜசாந், சிரோமி, அஸ்வினி, சர்வின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இலட்சுமி, நடராசா, பார்வதி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பமலர், குழந்தைவேலு, துரைராசா, தவமணிதேவி, வைத்திலிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பிஜயா, கனகலிங்கம், பழனி, வைரமுத்து, இராசையா ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.10.2024 பி.ப 1.00 மணிக்கு ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 272 5921
077 611 6054

தகவல்:
குடும்பத்தினர்

(2180)

## அரச ஊழிய...

என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சம்பள அதிகரிப்பு எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்பதும் பல கட்டங்களில் செய்யப்படுமா என்பதும் வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பின் போது கலந்துரையாடி தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம்.

எனினும், அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.(ம-7)

## கரிசனை...

ஜனாதிபதி அநுரவுக்கும் சிறீதரனுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

ஈழத்தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும் நிலைப்பாட்டையும் பிரதிபலிக்கும் எழுத்து மூல கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் ஜனாதிபதியிடம் நேரில் கையளித்துள்ளார். குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.காலமாறுதல்களின் அடிப்படையில்,

தங்களின் ஆட்சி, அதிகாரங்களின் மீது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பைப் போலவே, இலங்கைத் தீவின் சுதேசிய இனத்தவர்களான ஈழத்தமிழர்களும், தமது அடிப்படை உரித்துகள் மீதான சாதக நகர்வுகள் தங்கள் ஆட்சிக்காலத்திலேனும் ஈடேறும் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள் என்ற செய்தியை, அந்த மக்களின் பிரதிநிதியாக தங்களிடத்தே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

கடந்த ஏழரைதசாப்த காலமாக இந்த நாட்டில், ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ள நேர்ந்த இனவன்முறைப் பாதிப்புகள், அவற்றுக்கு நீதிகோரி மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்தேறிய போரின் விளைவுகள், போர் மௌனிக்கப்பட்ட பின்னரும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் வலிந்து மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன, மத, மொழி மற்றும் கலாசாரப் படுகொலைகள், கைதுகள், காணாமலாக்கல்கள் உள்ளிட்ட துயரச் சம்பவங்கள் தினம் தினம் அரங்கேற்றப்பட்டு வருவதை அறிந்திருப்பதைப்போலவே, தங்கள் ஆட்சியில் அத்தகைய துயர வரலாறுகள் இடம்பெறாதிருக்கும் என்ற எமது மக்களின் ஏகோபித்த நம்பிக்கையையும் தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன் என்றுள்ளது. (ம-7)


## பதவி வெற்றிடங்கள்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**ஆய்வுகூட மாதிரி சேகரிப்பாளர் - ஆண் 02**
**சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள்**

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுயவிபரத்தினை எமது tellicoophospital@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியூடாகவும், **0767711417** என்ற Whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 2024.10.15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு :

**077 238 0196, 076 771 1417**

தலைவர், தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை.

(C-1321)

## மலையக கலை கலாசார சங்கம் (இரத்தினதீபம்)

### தேசிய கௌரவபட்டம் வழங்கிய நிகழ்வு



நாட்டின் உயர்ச்சிக்காகவும்
மக்களின் மேம்பாட்டிக்காகவும்
அர்ப்பணிப்போடும்
மக்களின் நலத்திற்காகவும்
சேவையாற்றிய எமது
மனிதநேயம் உள்ள
சமாதான நீதவான்



## திரு.செ.தவராஜசிங்கம் அவர்களுக்கு

**தேசாபிமாணி சமூகத்தீபம்** பட்டம் வழங்கியமைக்காக பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

(2171)

பொன்.கஜேந்திரன், நா.மனோரஞ்சிதன்,
சி.பரமேஸ்வரன், க.சந்திரசேகரம்,
ற.சானுயன், த.மானஷா, மனைவி சிவனேஸ்வரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் குழந்தைகள் பயங்கரவாதிகளா?

# சர்வதேச சிறுவர் தினத்தில் போராட்டத்தில் குதித்த உறவுகள்




(வவுனியா)

சர்வதேச சிறுவர்தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் தமிழர் தாயகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.





இதன்போது கருத்துத் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இலங்கையில் எத்தனையோ சிறுவர் அமைப்புக்கள் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்ட எமது குழந்தைகளுக்கான நீதிப்பொறிமுறையினை ஒருவரும் ஏற்படுத்தி தரவில்லை.

எனவே, நாம் சர்வதேச நீதிகோரி எமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ் குழந்தைகள் பயங்கரவாதிகளா? சிறுவர் தினம் நீதி தேடும் தினம். பச்சிளம் குழந்தைகள் ஆயுதம் ஏந்தினரா போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களை எழுப்பியிருந்தனர். (நி-33-315-316)

# மரண அறிவித்தல்

## அமரர்.வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (தில்லை)

(ஓய்வு பெற்ற நில அளவையாளர், Geographic information systems (GIS) Consultant)



மலர்வு - 21.03.1945 உதிர்வு - 29.09.2024

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கொழும்பு , சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர், Geographic information systems (GIS) Consultant) அவர்கள் 29-09-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சாவகச்சேரியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகராணி (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும், சுபோதினி (லண்டன்), பாமினி (லண்டன்), அஜந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (லண்டன்), மனோகரன் (லண்டன்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தநாயகி (சாவகச்சேரி), பத்மசேனன் (கனடா), காலஞ்சென்ற மனோகரி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு சகோதரனும்,காலஞ்சென்ற ராஜசங்கரி மற்றும் தங்கராணி (கனடா), காலஞ்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற ஆனந்தநடேசன் - சுகுனாம்பிகை (கனடா), விமலாராணி - சண்முகதேவன் (நீர்வேலி), காலம்சென்ற இந்திராணி - சுகுனாநந்தன் (கனடா), ஜெயராணி - உமாபதிசிவம் (ஜேர்மனி), அருமைநாதன் - கிருபானந்தி (கனடா), இராசேந்திரம் - சரோஜினிதேவி (ஜேர்மனி), செல்வராணி - பாலசிங்கம் (நீர்வேலி), பத்மராணி - குகராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தில்குமார், ஜானகி, முரளினி- முரளிதரன், நடனதேவன் - தீபா, துவாரகன் ஆகியோரின் மாமனாரும், உஷா, கோபகன் ஆகியோரின் பெரியப்பாவும்,சாருஜன், கிருஜன், தீபனா, தீபிகா, சாரங்கன், சிறிரங்கன், அபிஷா, கோகிலவதனன், கோகில்ராஜ், விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-10-2024 நாளை வியாழக்கிழமை இலக்கம் 3 கற்குழி ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகன கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(c-1312)

சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு: சுபோதினி - மகள் +44 7984 438266 பாமினி - மகள் +44 7975 853181 அஜந்தன் - மகன் +16 477 7967991


தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தைகொண்டோ போட்டி

# வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி



ஆண்களுக்கான தேசிய மட்ட தைகொண்டோ போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜோண்றஜீவ் பியன்பெனோ வெண் கலப்பதக்கத்தை கைப் பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தைகொண்டோ போட்டிகள் இரத்தினபுரி புதிய நகர உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம் பெற்றது.


63-68 கிலோவிற்கு இடைப்பட்ட தைகொண்டோ போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜோண் றஜீவ் பியன்பெனோ வெண் கலப்பதக்கத்தை பெற்றுள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 150 | 100-130 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 220 | 160 | 250 | 250-280 | 320 |
| தக்காளி | 250 | 300 | 250 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 260 | 200 | 150-200 | 240 |
| கோவா | 350 | 300 | 300 | 260 | 300 |
| கரட் | 250 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 120 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200-230 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 190 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 350 | 600 |
| வெண்டைக்காய் | 200 | 120 | 100 | 80-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 160 | 250 | 150 | 250 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 320 | 280 | 260 | 200 | 400 |
| பீற்றூட் | 100 | 150 | 200 | 80-140 | 200 |
| கறிமிளகாய் | 350 | 500 | 700 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 500 | 250-300 | 500 |
| போஞ்சி | 250 | 500 | 400 | 240 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 500 | 400 | 500 | 300-360 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 130 | 80-150 | 100-140 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 500 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 170 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | -- | 150 |

## facebook. ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3233


அம்சவி




மயூரன்




சிவன்




நிதர்சனா




தினேஷ்





அஸ்வினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதி அநுரவை சந்தித்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது

இதன்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவிற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த அமெரிக்க தூதுவர், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளைத் தொடர்ந்தும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். (நி)

# இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தத் தடை

## முன்னாள் எம்.பிக்களுக்கு சிக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது இராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்துவதற்குத் தகுதியற்றவர்கள் எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார்.

அவர்கள் வெளிநாடு செல்ல வேண்டுமாயின், சாதாரண கடவுச்சீட்டின் மூலம் பயணிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர், இராஜதந்திர கடவுச்சீட்டுகள், கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள் உள்ளிட்ட சலுகைகளும் ரத்து செய்யப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார். (நி)

# நாளை மூடப்படும் மதுபானசாலைகள்

(கொழும்பு)

உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாளை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மது அருந்துவதால் உலகளாவிய ரீதியில் வருடத்துக்கு 3 மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

நாட்டில் நாளொன்றுக்கு 50 மரணங்கள் மதுவால் உயிரிழந்ததாக பதிவாகுகின்றன.

எனவே, உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட வேண்டும் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# லிட்ரோ நிறுவனத்திற்கு புதிய தலைவர் நியமனம்



(கொழும்பு)

லிட்ரோ காஸ் நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டெர்மினல் லங்கா நிறுவனத்தின் தலைவராக சன்ன குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக இருந்த முதித பீரிஸ் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பதவி விலகியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

**செல்வராசா கனகம்மா**

(குஞ்சம்மா)

சிரார்த்ததிதி : புரட்டாதி அமாவாசை

02.10.2024



தோற்றம் 1942.10.08 மறைவு 2021.10.06

உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி உன் நினைவுடன் வாழும்

அன்பான கணவன் மற்றும் உறவுகள்

(C-1313)

சந்தை வீதி, உடுப்பிட்டி.

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் உப அதிபர் திருமதி. சிவலோஜினி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

**சின்னத்தம்பி சிவபாக்கியம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



பிறப்பு 25.09.1938 இறப்பு 29.09.2024

ஆலமர விருட்சம் போல நிழல் தந்தாய்
ஆறாத துயரமதைத் தந்து சென்றாய்
போன இடம் தெரியாது வாடுகின்றோம்
நித்தம் உம் நினைவு
எம் நெஞ்சில் எந்நாளுமுண்டு

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

(C-1314)

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்


# இராசிபலன்

02.10.2024

புரட்டாதி 16, புதன்கிழமை

அமாவாசை பின்னிரவு 12.20 மணிவரை

உத்தரம் பிற்பகல் 1.34 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

மஹாளயபட்ச முடிவு

அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்:திருவோணம், அவிட்டம்

**வளவன்**

**மேஷம்** மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உடல் நலனில் இருந்த இடையூறுகள் அகலும், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளும் ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்** குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதம் என்பன ஏற்படலாம்.

**மிதுனம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், தேக நலனில் அக்கறை கூடும்

**தனுசு** உற்றார் உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், சொந்த பந்தங்களின் வருகையில் சிந்தை மகிழ்வீர்கள், சுப காரிய முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

துன்பத்தை வெளியில் சொன்னால் சிறிது குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
# சபை நிதி - 2024 கட்டம் IV

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது. (SBD -03)

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.10.03 ஆம் திகதியிலிருந்து 2024.10.15 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா. 3,000.00** (வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2024.10.16 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையினை **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2024.10.10** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-IV/2024/01 | வீதிகள் புனரமைத்தல் (K.K.S வீதி உப ஒழுங்கை, புலவனார் வீதி, வாகீஸ்வரி வீதி) | 4.36 | 63 நாட்கள் | C8 & C7 வீதி | 63 நாட்கள் | 66,000.00 | 2025.01.14 |
| 2. | NPS/CF-IV/2024/02 | குளப்பிட்டி கருவேலடி வீதி புனரமைத்தல் | 12.54 | 63 நாட்கள் | C6 & C5 வீதி | 77 நாட்கள் | 190,000.00 | 2025.01.28 |
| 3. | NPS/CF-IV/2024/03 | மீள் தாரிடல் ( மணியந்தோட்டம் வீதி, பனிக்கர் ஒழுங்கை) | 2.06 | 49 நாட்கள் | C8& C7 வீதி | 63 நாட்கள் | 31,000.00 | 2025.01.14 |
| 4. | NPS/CF-IV/2024/04 | இளையதம்பி வீதி புனரமைத்தல் | 12.85 | 63 நாட்கள் | C6 & C5 வீதி | 77 நாட்கள் | 193,000.00 | 2025.01.28 |
| 5. | NPS/CF-IV/2024/05 | காரைமுனங்கு இயற்கை பசளை நிலைய வீதி புனரமைத்தல். | 3.88 | 63 நாட்கள் | C8 & C7 வீதி | 63 நாட்கள் | 58,500.00 | 2025.01.14 |

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

(C-1317) 2024.10.02

# க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள் -2024

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

சிவகரன் அபிசாய்ராம்- 9ஏ, கிறிஸ்ரன் பிரசாத் றியாஸ்மன்-9ஏ, கௌரிக்காந்தன் மாதுளன்-9ஏ, கிருபாகரன் யதுசன்-9ஏ, தர்மகுலராஜா தோலீசன்-9ஏ., சிவராஜா சிவர்தன்-9ஏ, சந்திரகுமாரன் ஸ்ரீராம்ஜீ- 9ஏ, கனேசநந்தன் கனிமொழி-9ஏ, அமலராஜா அமலமௌலீஸ்- 8ஏபி, தர்சன்பாபு தஷாங்கன்- 8ஏபி, சண்முகராஜா ஷாம்புயன்- 8ஏபி, அருந்தநாதன் அக்ஷயன்-8ஏபி, பரலோகராசா மறிக்சலா-8ஏபி, புலேந்திரன் றாகவி-8ஏபி,நந்தகுமாரன் தனுலவன்-8ஏபி, குலேந்திரன் ரம்சிகன்-8ஏசி, சண்முகலிங்கம் ஜனுஜா- 8ஏசி.

## யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி

தவயோகராசா பிரியதரன்- 9ஏ, ராஜ்குமார் பவன்ராஜ்- 8ஏபி.

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

துர்க்கா ஜெசீலன்-9ஏ, சுவந்திகா சத்தியநந்தன்-9ஏ, தேனுஜா மகேந்திரராசா- 9ஏ, துசிந்தா சிவநாதன்- 8ஏபி, கார்னவி பகீரதன்-8ஏசி, அபிநயா றஞ்யநாதன்- 8ஏஎஸ்.

## யா/நெல்லியடி மத்திய கல்லூரி

அம்பிகைபாகன் கவிஸ்- 8ஏபி, சுதர்சன் தனூர்ஜன்- 8ஏபி, ஜே. வி.வர்ஷிக்கா மில்லெனியா- 8ஏபி, சுபநந்தன் பகீர்த்தனன்-8ஏசி, சத்தியசீலன் திலக்சன்-8ஏசி, ரவிச்சந்திரன் பிரவீன்ராஜ்-8ஏசி, கெங்காதரன் அபினேஸ்- 8ஏசி.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக் கணப்பாய் அருள்மிகு கண்ணகாம் பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய நவராத்திரி விழா நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலாசாலை தினவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)



இலங்கைத் தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கான விருது விழாவான "குவியம் விருதுகள் 2024" நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஈழத்து முதுபெரும் இசை கலைஞர் கலைவாணர் கண்ணன் மாஸ்டருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பேருந்து கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு) இலங்கையில் பேருந்து கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் அதன் நன்மைகளை மக்களுக்கு வழங்க வுள்ளதாக, சங்கத்தின் பொது செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பேருந்து கட்டணத்தை 4 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டதாக நேற்றுக் காலை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருட்களின் விலையை குறைப்பதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


## வாடகைக்கு

நாகலிங்க சுவாமிகள் வீதி சங்கானை கிழக்கில் வாடகைக்கு ஒரு அறை மட்டும். இரண்டு பேர் மட்டும் தங்கலாம். சகல வசதிகளும் உண்டு. (2001)

தொடர்பிற்கு:
076 217 4179, 021 225 0421

## விற்பனைக்கு

யாழ். மாவிட்டபுரம் கோயிலுக்கு அண்மையில் 60 பரப்புக் காணியும், யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்புக் காணியும், யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும், யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் சுற்று மதிலுடன் 2 1/2 பரப்புக் காணியும், யாழ். திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் சந்தைக்கு முன்பாக 1 1/2 பரப்பில் அமைந்த வீடும், யாழ். மாநகர சபைக்கு முன்பாக குறோஸ் வீதியில் 10 பரப்புக் காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. ஊறகாவற்றுறை சுறவில் வீதியில் 15 பரப்புக் காணி பழைய இலங்கை வங்கிக்கு அருகில் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு: 077 723 2535
தர்மகுலசிங்கம் (சி-1315)


## பொது அறிவித்தல்
## வேலணை பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கான முன்மொழிவுகள் கோரல்

எமது சபையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகள் வேலணை பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கோரப்படுகின்றது.

குறிப்பாக பெண்கள், இளையோர், விசேட தேவையுடையோர் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களிடமிருந்து முன்மொழிவுகள் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆர்வமுடையோர் எதிர்வரும் 14.10.2024ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் வழிகளினூடாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


தபால் முகவரி: செயலாளர், வேலணை பிரதேச சபை.
மின்னஞ்சல்: velanaips@gmail.com
தொலைபேசி இல : 021 2210180 / 02122211506
இணையத்தளம் : www.velanai.ps.gov.lk

தி.தியாகச்சந்திரன்
செயலாளர்,
வேலணை பிரதேச சபை. (சி-1316)

# என்றும் நெஞ்சை விட்டு அகலாத பதினாறாம் (16) ஆண்டு நினைவலைகள்

## அமரர். கந்தசாமிப்பிள்ளை விக்னராஜேஸ்வரன்

(B.Sc, PGDE, ISA (maths) SLPS)
(நிக்கவெரட்டிய கல்வி வலயம்)
திதி: 02.10.2024 (அமாவாசை)



அன்னை மடியில்
12.04.1961

ஆண்டவன் அடியில்
29.09.2008

மனதிலுறை தெய்வமே
மனிதருள் மாணிக்கமே
கருணையின் இருப்பிடமே
கணிதத்தின் கனியே
சமூகத்தின் தொண்டரே
சரித்திரம் படைத்தவரே

காலனவன் பொறுக்காமல்
கடுகதியில் பறித்தெடுத்த
ஆண்டுகள் ஈரெட்டில்
ஆறாகக் கண்ணீரில்
என்றுமே நீங்கா
நினைவுகளுடன் நாங்கள்

உங்கள் ஆத்மா வடிவாம்பிகை சமேதர முன்னைநாதர் தாள் சேரப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!


என்றும் பிரிவுத்துயரால் வாடும்
ஆருயிர் மனைவி, குடும்பத்தினர்
[illegible]

பன்னாலை,
தெல்லிப்பளை.
(1000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நடிகர் ரஜினிகாந்த் மருத்துவமனையில் அனுமதி



(டில்லி)

இந்திய நடிகர் ரஜினிகாந்த், வயிற்று வலி தொடர்பான பிரச்சினை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கும் கூலி படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்டு வந்த நிலையில் திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## வேகமாக வளர்ச்சி அடையும் எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்

(லண்டன்)

எவரெஸ்ட் சிகரம் பல ஆண்டுகளாக மெதுவாக உயரமாக வளர்ந்து வருவதாக அண்மைய ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.



கடல் மட்டத்திலிருந்து 8,849 மீற்றர் உயரத்தில் உள்ள எவரெஸ்ட் இமய மலையின் மற்ற பெரிய சிகரங்களை விட சுமார் 250 மீற்றர் உயரம் கொண்டது.

இது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 மி.மீ வளர்ந்து வருகிறது.

சோமோலுங்மா என்றும் அழைக்கப்படும் எவரெஸ்ட் சிகரம், கடந்த 89,000 ஆண்டுகளில் எதிர்பார்த்ததை விட சுமார் 15 முதல் 50 மீற்றர் (50 முதல் 164 அடி) வரை உயர்ந்துள்ளது என்று திங்களன்று வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இப்பகுதியில் ஓடும் ஆறுகளால் மலை அடிவாரத்திற்கு கீழே உள்ள பாறைகள் பல ஆண்டுகளாக அரிக்கப்பட்டு வருவதால் இந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இமாலய மலைத் தொடரின் ஒரு பகுதியான எவரெஸ்ட் சிகரம், நேபாள-திபெத் எல்லையில் சுமார் 8,850 மீற்றர் (29,000 அடி) உயரத்தில் உள்ளது.

அருகிலுள்ள K2 சிகரம் 8,611 மீ உயரம் கொண்டது. இமயமலையில் உள்ள மற்ற மூன்று உயரமான மலைகள் 8,586 மீற்றர், 8,516 மீற்றர் மற்றும் 8,485 மீற்றர் உயரங்களை கொண்டது. (நி)

## தாய்லா
## 25 மா

(பாங்கொங்)

### தாய்லாந்தில் மா
### பேருந்தில் ரயர் வெ
### மாணவர்கள் உயிரி
### காயமுற்று மருத்து
### டுள்ளனர்.

தாய்லாந்தில், மத்திய உதாய் தானி மாகாணத்தில் இருந்து பாங்கொக் நோக்கி பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 44 பேர் பேருந்தில் சுற்றுலா சென்றனர்.

அப்போது திடீரென ரயர் வெடித்ததில், பேருந்து தீ பற்றி எரிந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் போராடித் தீயை

அனை
25 ம
தனர்.
காயமு
தீ
கொனெ
உட்ப
பேருந்
றியன
லேசா
தப்பி
காண

## மக்களின் உயிரைக் காக்க 100 முதலைகளை கொன்று குவித்த பண்ணையாளர்



(பாங்கொங்)

மழை, வெள்ளத்தில் முதலைகள் அடித்துச் செல்லப்பட்டால் அது மக்களை கடித்து தின்றுவிடும் எனக் கருதிய முதலை பண்ணை உரிமையாளர் ஒருவர் தான் வளர்த்த 100 முதலைகளைக் கொடூரமாக கொன்று குவித்த சம்பவம் தாய்லாந்தில் நடைபெற்றுள்ளது.

தாய்லாந்தில் வடக்கு மாகாணமான லாம்பூன் என்ற பகுதியைச் சேர்ந்தவர் நெத்தம்பக் கும்காட். இவர் தனது தோட்டத்தில் முதலை பண்ணை வைத்து 100 இற்கும் மேற்பட்ட சியாமி இன முதலைகளை வளர்த்து வந்தார். இம்முதலைகள் ஒவ்வொன்றும் 14 முதல் 16 அடி நீளம் கொண்டவை.

இந்நிலையில் இப்பகுதியில் கடந்த புயல் காரணமாக சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் வெள்ளநீர் இவரது பண்ணையை சூழ்ந்துவிட்டது. சுற்றுச்சுவர் இடிந்து வருவதை கண்டு அச்சமடைந்தார்.

ஏனெனில் சுற்றுச்சுவர் முற்றிலும் இடிந்து விழுந்தால், பண்ணைக்குள் வெள்ளநீர் புகுந்து முதலைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு வெளியேறி மக்களை தாக்கி கடித்து தின்றுவிடும் என அஞ்சினார்.என்ன செய்வது என யோசித்த நிலையில் மக்களின் உயிர் தான் முக்கியம் என உணர்ந்த கும்காட், மர அறுவை மிஷன் உதவியுடன் 100 இற்கும் மேற்பட்ட முதலைகளை அறுத்து கொன்று குவித்தார்.

இதன் புகைப்படத்தை தனது முகநூலில் பதிவேற்றி, செல்பி எடுத்தார். பின் மக்களை காப்பாற்ற தான் வளர்த்த முதலைகளை கொன்றது எனது அவசர முடிவு என அதற்கான காரணத்தையும் தெரிவித்தார். (நி)

## நிலக்கரி மின் உற்பத்திக்கு ‘குட்பாய்’ சொன்ன பிரிட்டன்

(லண்டன்)

உலகின் முதல் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் தாயகமான பிரிட்டன், அதன் கடைசி யூனிட்டான "ராட்க்ளிப் - ஆன் - சோர்" ஆலையை நேற்று முன்தினம் மூடியது. இதன் வாயிலாக, "ஜி - 7" அமைப்பில் உள்ள நாடுகளில் நிலக்கரி மின் உற்பத்தியை முற்றிலுமாக நீக்கிய முதல் நாடு என்ற பெருமையை பிரிட்டன் பெற்றுள்ளது.

கடந்த 1800களில் இருந்ததை விட தற்போது பூமியின் வெப்பநிலை, 1.5 டிகிரி செல்ஷியஸ் அதிகரித்துள்ளதாக புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா., சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, புவி வெப்பமடைதலை கட்டுப்படுத்த, 2030 ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய உமிழ்வுகள் 45 சதவீதம் குறைக்கப்பட வேண்டும் என்றும், 2050 இற்குள் நிகர பூஜ்யத்தை அடைய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து, உலகின் முதல் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை துவங்கிய ஐரோப்பிய நாடான பிரிட்டன், 2025இற்குள் நிகர பூஜ்ய உமிழ்வு நிலையை அடைய வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்தது.

இதையடுத்து, நாட்டில் இருந்த கடைசி நிலக்கரி மின் உற்பத்தி ஆலையை நேற்று முன்தினம் அந்நாட்டு அரசு மூடியது. அங்கு, 1882இல் தாமஸ் ஆல்வா எடிசனின் எலக்ட்ரிக் லைட் நிறுவனத்தின் உதவியுடன், "ஹோல்போர்ன் வயடக்ட்" என்ற நிலக்கரி உற்பத்தி நிறுவனம் லண்டனில் தொடங்கப்பட்டது.

அன்று முதல் நேற்று முன்தினம் வரை, பிரிட்டனின் வளர்ச்சியில் நிலக்கரி முக்கிய

## ஷாங்காய் பல்பொருள் அங்காடியில் க




### மூவர் உயிரிழப்ப

(பீஜிங்)

சீனாவின் ஷாங்காய் நகரி
அமைந்துள்ள வால் மார்ட்
பல்பொருள் அங்காடியி
இடம்பெற்ற கத்திக் குத்து
தாக்குதலில் மூன்று பே
கொல்லப்பட்டுள்ளதோடு, 15 பே
காயமடைந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ாந்தில் தீக்கிரையான பேருந்து

# ...ாணவர்கள் உடல் கருகிப் பலி!

...மாணவர்கள் சுற்றுலா சென்ற ...வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில், 25 ...யிரிழந்தனர். மேலும் சிலர் பலத்த ...த்துவமனையில் அனுமதிக்கப்பட்



அணைத்தனர். தீயில் கருகி, 25 மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும், சிலர் பலத்த காயமுற்றனர்.

தீ பற்றியதும் சுதாரித்து கொண்ட, 3 ஆசிரியர்கள் உட்பட சில மாணவர்கள் பேருந்தில் இருந்து வெளியேறியனர். இதனால் அவர்கள் லேசான காயத்துடன் உயிர் தப்பினர். மேலும், சிலரை காணவில்லை அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது என மீட்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுற்றுலா சென்ற போது விபத்து நிகழ்ந்துள்ளது.

தீ விபத்தில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பது தெரியவில்லை. ஆனால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)



பங்காற்றிஉள்ளது. நிகர பூஜ்ய உமிழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதை அடுத்து, அங்கு செயற்பட்டு வந்த பல்வேறு நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களை பிரிட்டன் படிப்படியாக மூடியது.

கடைசியாக, நாட்டிங் ஹாம் ஷையரில் செயற்பட்டு வந்த ராட்க்ளிப் ஆலை நேற்று முன்தினம் மூடப்பட்டது. கடந்த 57 ஆண்டுகளாக நிலக்கரி வாயிலாக மின்சாரத்தை தயாரித்து வந்த ஆலை, அதன் மூச்சை நேற்று முன்தினம் கடைசியாக நிறுத்தியது. (நி)

## ...ல் கத்திக்குத்து

### ...ழப்பு, 15 பேர் காயம்

... நகரில் ... மார்ட் ...டியில் ...குத்துத் ... பேர் ..., 15 பேர்

தனிப்பட்ட தகராறு காரணமாக 37 வயதுடைய நபர் ஒருவரால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும், தாக்குதல்தாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் பொதுப் பயன்பாட்டுக்கு துப்பாக்கிகள் தடைசெய்யப்பட்டுள்ளன, ஆனால் கடந்த சில மாதங்களாக நாட்டில் கத்திக்குத்து தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நேபாளத்தில் தொடரும் கனமழை

- இதுவரை 200 பேர் உயிரிழப்பு
- 3700 பேர் உயிருடன் மீட்பு





(காத்மண்டு)

நேபாளத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் தலைநகர் காத்மண்டுவில் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழைவெள்ளம் தலைநகரில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சியான மழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்துள்ளதால் தலைநகரின் பல நகராங்களில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்துள்ளன, நெடுஞ்சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன, மின் கோபுரங்கள் வீழ்ந்துள்ளன என நேபாள தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலநிலை நெருக்கடி காரணமாகவே நேபாளம் மிக அதிகளவான ஆபத்தான மழையையும் வெள்ளத்தையும் எதிர்கொண்டுள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் காரணமாக தங்களின் வீடுகளிற்குள் சிக்குண்டுள்ளவர்களையும்,தொலைதூர பகுதியில் வெள்ளத்தினால் சிக்குண்டுள்ளவர்களையும் தேடி கண்டுபிடித்து மீட்பதில் மீட்பு பணியாளர்கள் கடும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதுவரை 3700 பேரை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறுவர் உலகை வெல்வதே எமது இறுதி இலக்கு"

## சிறுவர் தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

**குழந்தைகளுக்கே உரித்தான சிறுவர் உலகை மீண்டும் வெல்வதே எமது மறுமலர்ச்சிப் பணிகளின் இறுதி இலக்கு எனவும் உலகம் சிறுவர்களுக்கானது, அவர்களின் உலகத்தை நம் கரங் களினால் உருவாக்குவோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட சிறுவர் தினச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கையில், ஏழ்மை, போசாக்குக் குறைபாடு, சுகாதாரம் மற் றும் சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி யில் ஏற்றத்தாழ்வு, சமூக வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வு, போதைப் பொருள் அத்துடன் தொழில்நுட்பத்தின் தவறான பயன்பாட்டிற்கு பலியாவது போன்றன இந்த மிலேனியத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

மேலும், சிறுவர்களின் உளவியல் சமூக வளர்ச்சியைத் தடுக்கும் சமூக விளைவுகள் மற்றும் மன அழுத்தம் நிறைந்த பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைகள் போன்ற தாக்கங்களில் இருந்து தற்போதைய தலைமுறைச் சிறுவர் சமூகத்தை விடுவித்து பிள்ளைகளுக்கே உரித்தான சிறுவர் உலகை மீண்டும் அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதே நமது மறுமலர்ச்சிக் காலப் பணியின் முக்கிய குறிக்கோளாகும்.

உடலாலும், உள்ளத்தாலும் ஆரோக்கியமான சிறுவர்களின் தலைமுறையை உருவாக்குவதன் மூலம், எதிர்கால உலகை வெல்லும் சுதந்திரமான கற்பனைத்திறன் கொண்ட கனிவான மற்றும் உன்னதமான மனிதர்கள் உருவாக்கப்படுவதாக நாம் நம்புகிறோம்.

அதற்கு அவசியமான பொருளாதார சுதந்திரம் மற்றும் மனித நேயம், பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றைக் கொண்ட சமூகத்தை உருவாக்குதல் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்த சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் தேவையான அரசியல் மாற்றத்தை நமது முன்னுரிமைப் பணியாகக் கருதி செயற்படுத்த அர்ப்பணிப்போம். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்படுவோம் என்று அவர்தெரிவித்துள்ளார். (ஙி)

# இம்மாதம் முழுவதும் பிறப்புச் சான்றிதழ்களை கட்டணமின்றி பெறலாம்

(கொழும்பு)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில், இம்மாதம் முழுவதும் கட்டணம் செலுத்தாமல் உரிய பிறப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை கள் திணைக்களத்துடன் இணைந்து பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் குறித்த சேவையை முன்னெடுக்கவுள்ளனர். (ஙி)

# புலமைப்பரிசில் பரீட்சை திருத்தப் பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாள் பிரச்சினை தொடர்பில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுவந்த பெற்றோர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவல கத்தில் நடைபெற்றது.

இதன் போது 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகளை இரு வாரங்களுக்கு இடைநிறுத்து மாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளின் 3 கேள்விகள் அன்றி 8 கேள்விகள் பரீட்சைக்கு முன்பாகவே வெளியாகி இருந்ததெனவும், அந்தப் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் பெற்றோர்கள், ஜனாதிபதியிடம் வேண்டு கோள் விடுத்தனர். (ஙி)

# இன்று ஒரு தகவல் 234



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பக்தி

இராமர், இலட்சுமணர், விசுவாமித்திரர் மூவரும் ஒரு இடத்திலே வந்து கொண்டு இருக்கிறார்கள். ஜனகருடைய அழைப்பிற்கு இணங்கி மிதிலாபுரிக்கு அருகிலே அவர்கள் வந்து கொண்டு இருந்தார்கள். வழியில் குறுக்கே ஒரு நதி. அந்த நதியைத் தாண்டி அடுத்த கரைக்கு அவர்கள் செல்ல வேண்டும். என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள்.

அந்த நேரத்திலே கறுப்பாக ஒரு ஆள் அவர்கள் முன்னால் வந்து நின்றான். யாரப்பா நீ என்று விசாரித்தார்கள். நான் ஒரு மீனவன். இந்த நதியிலே ஓடம் விட்டுக் கொண்டு இருக்கின்றேன் என்றான். அதிலே எவ்வளவு பேர் ஏறலாம் என்றார்கள். 60 பேர் ஏறலாம் என்றான். நாங்கள் மூன்று பேர் தான் இருக்கிறோம் என்றார்கள். நீங்கள் மூன்று பேரும் மும்மூர்த்திகளுக்கு சமனானவர்கள். உங்கள் மூன்று பேருக்காக மட்டுமே ஓடத்தை செலுத்துவேன். மற்றவர்களுக்காக காத்திருக்க வேண்டியதில்லை என்றான். இருந்தாலும் அறுபது பேருக்குரிய கட்டணத்தை நாங்கள் கொடுத்து விடுகிறோம் என்றார்கள். காசை விட உங்கள் ஆசி தான் எனக்குப் பெரிது என்றான் இவன். விசுவாமித்திரர் முதலிலே ஏறினார். அடுத்தபடியாக இராமர் அந்த இடத்திலே ஏற முயற்ச்சி செய்தார். ஆனால் அதற்குள்ளே திடீரென்று அந்த ஓடக்காரன் காலை ஓடத்திலே வைக்காதே என்று கத்தினார்.

அவர்கள் திகைத்துப் போய்விட்டார்கள். ஒன்றும் புரியவில்லை. இலட்சுமணருக்கு பயங்கரமாக கோபம் வந்து விட்டது. என்ன இது இவன் மூன்று பேரையும் மும்மூர்த்திகள் என்றான் இப்போது இப்படிக் கத்துகிறான். சக்கரவர்த்தி மகனைப் பார்த்தே இப்படி சொல்கிறானே என்ன துணிச்சல். இவன் இருக்கட்டும் ஏறி உட்காருங்கள் நான் ஓட்டுகின்றேன் ஓடத்தை என்றார் இலட்சுமணர்.

தம்பி ஆத்திரப்படாதே என்று சொல்லிவிட்டு இராமர் அந்த ஓடக்காரனைப் பார்த்தார். ஏனப்பா நான் ஏன் இதில் ஏறக் கூடாது என்று சொல்கிறாய் என்ற கேட்டார். ஐயா அந்த சின்ன ஐயா என் பேரிலே கோபப்படுகின்றார். அவர் வேண்டும் என்றால் ஓடத்தில் ஏறட்டும். நீங்கள் மட்டும் ஏறவேண்டாம் என்றார். அது தான் ஏன் அப்படி சொல்கிறாய் என்று கேட்கிறேனே் என்றார் இராமர். ஐயா நீங்கள் யார் என்று கேட்டான் அவன். இந்த நாட்டிற்கு ஐயா யார் என்ற தெரியுமா? உனக்கு என்றார். நன்றாகத் தெரியுமே தசரதச்சக்கரவர்த்தியல்லவா என்றான். அந்த தசரத ராஜ குமாரன் தான் நான் இது என் தம்பி என்றார்.

உடனே அவர்கள் காலிலே விழுந்து வணங்கினான் ஓடக்காரன். இதை முன்னரே சொல்லியிருக்க கூடாதா அது தெரியாமல் நீங்கள் யார் என்று கேட்டுவிட்டேன். உங்களுக்கு கோடி நமஸ்காரம். இருந்தாலும் தங்களுடைய பாதத்தை மட்டும் ஓடத்திலே வைக்க வேண்டாம் என்றான். அந்த ஒரு விடயத்திலே மட்டும் அவன் பிடிவாதமாக இருந்தான். இராமர் முகத்திலே புன்னகை. அது சரியப்பா நான் உன்னுடன் ஓடத்திலே ஏறினால் உனக்கு என்ன குறை உண்டாகும் என்று கேட்டார். அந்த ஓடக்காரன் இப்பொழுது தான் மெதுவாக சொல்ல ஆரம்பிக்கிறான்.

ஐயா நீங்கள் வந்த வழியிலே ஒரு கல் இருந்தது. நான்கூட சின்னப் பிள்ளையாக இருந்த போது அந்தக் கல்லிலே ஏறி சறுக்கு விளையாட்டு விளையாடியது உண்டு. நீங்கள் கல்லிலே கால் வைத்தவுடனே அந்தக் கல் பெண்ணாகிவிட்டது. இந்த ஓடத்திலேயும் கல், மரம், இரும்பு எல்லாம் இருக்கிறது. இதிலே நீங்கள் காலை வைத்தவுடனே இந்த ஓடமும் பெண்ணாகிவிட்டது என்றால் நான் என்ன செய்வேன். இந்த ஓடத்தை வைத்து தானே நான் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறேன் என்றான்.

இராமர் சிரித்தார். சரி நாங்கள் அடுத்த கரைக்கு போவதற்கு ஒரு வழி சொல் என்றார். வேறு ஒன்றும் இல்லை. இந்த நதி மீதிலே உங்கள் காலை கழுவிக் கொள்ளுங்கள். உங்கள் காலிலே இருக்கின்ற கல்லை பெண்ணாக்குகின்ற அந்த மருந்து தண்ணீரிலே கரைந்து விடும். அதற்கு பின் எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை என்றான். சரி என்று நதியிலே இறங்கினார். ஐயா காலைக் காலாலே தேய்த்து கழுவக்கூடாது என்பது உங்களுக்கு தெரியும். அதனால் இந்த வேலையை என்னிடம் விடுங்கள். உங்கள் காலை நானே என் கையால் நன்றாக தேய்த்து கழுவி விடுகிறேன் என்றார். சரி என்றார் இராமர். செப்பு தாம்பாளத்திலே இராமர் நிற்கின்றார். இவன் நதி நீரை எடுத்து அபிஷேகம் செய்கின்றான். இராமா உன்னுடைய பாத பூஜைக்கு பெரிய பெரிய முனிவர்கள் எல்லாம் பல காலம் தவம் செய்து கொண்டு இருக்கிறார்கள். தவமே செய்யாத இந்த ஏழை மீனவனுக்கு அந்த பாக்கியம் முதலில் கிடைத்திருக்கிறதே என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டான்.


பாத பூஜை செய்வதற்காகத் தான் இவன் என்னை ஓடத்திலே ஏற்ற மறுத்தான். இவன் பரம பக்தன் என்று தம்பியிடம் சொன்னார் இராமர். அதற்கு பின் எல்லோரும் ஓடத்திலே ஏறி அக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். ஓடத்தை விட்டு இறங்கிய உடனே இராமர் தன் விரலிலே இருந்த நவரத்தின மோதிரத்தை அவரிடம் கொடுக்க வந்தார். ஐயா நான் சின்ன ஓடக்காரன். நீங்கள் பெரிய ஓடக்காரன். ஒரு தொழிலாளியிடமிருந்து இன்னொரு தொழிலாளி இனாம் வாங்கக்கூடாது என்றான் அந்த நபர்.

என்ன எங்கள் அண்ணண் ஓடக்காரனா என்று கோவப்பட்டான் இலட்சுமணன். ஆமாம் நான் இந்த சிறிய ஆற்றிலே உங்களை கரை சேர்க்கும் ஓடக்காரன். ஆனால் நீங்கள் பிறவி என்கின்ற பெரும் கடலிலே தத்தளிக்கின்ற ஆன்மாக்களை முக்தி என்கின்ற கரையிலே சேர்கின்ற பெரிய ஓடக்காரன். இப்பொழுது உங்களை கரை சேர்ப்பதற்கு நான் பரிசு வாங்கினால் அதன் பின் என்னை கரை சேர்க்கின்றபோது நான் பரிசு கொடுக்க வேண்டாமா? இப்போது நான் இனாமாகத் தொண்டு செய்தால் தானே அந்த சமயத்திலே நீங்கள் எனக்கு உதவி செய்வீர்கள் என்றான்.

அந்த எளிய மனிதனுடைய அன்பும் பண்பும் எல்லோரையுமே ஆச்சரியப்பட வைத்ததாம். பக்தி என்றால் அது இப்படி இருக்க வேண்டும். சும்மா பட்டையை போட்டுவிட்டு காவியைக் கட்டிக் கொண்டால். பக்தி வந்து விடுமா? எங்கள் ஆள் ஒருவர் இந்த காலத்திலே ஒரு ஆற்றை கடக்க வேண்டியிருந்து. ஓடத்திலே அடி வைக்க போனான். ஓடக்காரன் உங்கள் பாதம் என் ஓடத்திலே படக்கூடாது என்று விட்டான். அவருக்கு மிகவும் பெருமையாக போய்விட்டது. ஏனப்பா என் காலை நீ கழுவ வேண்டும் என்று ஆசைப்படுகின்றாயா என்றார். அவன் நிமிர்ந்து பார்த்தான். மூன்று மாதமாக உன்னை கடனுக்கே கரை சேர்த்துக் கொண்டிருக்கிறேன். பழைய பாக்கியை செலுத்திவிட்டு இன்று என் ஓடத்திலே உன்னை அடி வைக்க விடுவேன். தயவு செய்து என்னை தொந்தரவு செய்யாதே என்று கூறி அவர் காலிலே விழுந்தான் இது ஒரு விதமான பக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்ப்பை அடுத்து மூடப்பட்டது மதுபானசாலை



(மன்னார்)

மன்னார், தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை மக்களின் எதிர்ப்பு காரணமாக உடனடியாக தற்காலிகமாக மூடுமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார், தலைமன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை இடமாற்றக்கோரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒன்றுகூடிய மக்கள் சவப்பெட்டி சகிதம் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரச்சினையை அரச அதிபர் உடனடியாக மதுவரி திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் குறித்த மதுபானசாலையை தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

# மானிப்பாய் பிரதேச நூலக வாசிப்பு மாத போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொது நூலகங்களில் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய வாசிப்பு மாத போட்டிகள் ஆரம்பமாகியுள்ளது.

மேற்படி பொது நூலகங்களில் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" எனும் தொனிப் பொருளில், வாசகர் மற்றும் மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு தரம் 1-3, தரம் 4-5, தரம் 6-8, தரம் 9-11, தரம் 12-13, வரையான வகுதிகளில் வாசிப்பு, திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரை, பேச்சு, கவிதை, சித்திரம் வரைதல், பொது அறிவு, துண்டுப்பிரசுர வெளியீடு, புதிய நூல்களின் கண்காட்சி மற்றும் சிறார்களுக்கான பொழுது போக்கு நிகழ்வு போன்ற போட்டிகளும், முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல், நிறம் தீட்டுதல், எண்கள் மற்றும் எழுத்துகளை இணைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளது.

எனவே, மேற்படி போட்டிகளில் கலந்து கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துமாறு மானிப்பாய் பிரதேச சபையின் நூலக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

# ஜனாதிபதி அநுரவை சந்தித்தார் சிறீதரன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் இறைமையின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்த எஸ். சிறீதரன் , ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிற்போடப்பட்டுள்ள பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் 05.10.2024 அன்று நடைபெறவிருந்த பொது சபைக்கூட்டமானது 01.10.2024 ஆம் திகதிய பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக பிற்போடப்பட்டுள்ளது என்பதுடன் மீளவும் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறியத்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நல்லையம்பதி மஹாளய பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லையம்பதி சிங்கார வேலவன் சிவ காயத்திரி சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதான மஹாளய பூஜை விஞ்ஞாபனம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை ருத்ர ஹோமமும் திருவாசகமுற்றோதலும் இடம்பெறும்.

அதேவேளை காலை 8 மணியில் இருந்து இறந்த மூதாதையரின் ஆத்மா சாந்திக்காக அடியார்கள் பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து பித்ரு வழிபாடுகளை ஆற்றிக் கொள்ள முடியும் என ஆலய முதன்மை பிரதம குரு இராஜ ஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள் அறிவித்துள்ளார். (நி)

# பருவமழை ஆரம்பம்: விவசாயிகளுக்கான நற்செய்தி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


கடந்த நான்கு மாதங்களும் வரண்டு வெப்பநிலையும் அதிகரித்து காணப்பட்டது. வழக்கமாக தேவைப்படுகின்ற நீர்த் தேவைக்கு மேலதிகமாக நீர்ப்பாச்ச வேண்டியேற்பட்டிருக்கின்றது. இருப்பினும் முன்னைய ஆண்டுகளைப் போல் அதிகரித்த வரட்சியில்லை. அதனால் பயிர்களில் இழப்புக்கள் பலமாக இல்லை. தென்னை மரங்கள் ஓரளவுக்கு இருந்த வரட்சியை தாக்குப்பிடித்திருந்தன. இதனால் பலத்த சேதமாக எதுவும் பதியப்படவில்லை. ஆனாலும் மக்கள் நீர்த் தேவைக்காக அங்கலாய்த்த தருணங்கள் ஆங்காங்கே இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் இதை எழுதும் போது முழக்கத்துடன் மழை பெய்யத் தொடங்கினாலும் தேவைக்களவாக பெய்யவில்லை. திரண்டிருந்த கார்மேகம் கலையத் தொடங்கிவிட்டது. காலபோகம் மழையுடன் ஆரம்பிக்கின்றதென்றால் அது இன்று நடக்கவில்லை. இம்முறை மழை எதிர்பார்த்ததை விட அதிகமாக பெய்தல் வேண்டும். வரண்டு போன நீர்நிலைகளுக்கு மழை நீர் வந்து தேங்கினால் தான் அடுத்த வருடம் நீர்த்தேவையை நாம் பூர்த்தி செய்ய முடியும். நீரின் தேவை பயிர்ச்செய்கைக்கு அத்தியாவசியமாக இருப்பதனால் நீரைத் தேக்கி வைக்கும் நடைமுறைகளில் அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகின்றது.

இம்முறை பயிர்ச்செய்கைக்கான ஊக்குவிப்புத் தொகை உரியநேரத்தில் கிடைத்தால் விவசாய பெருமக்களுக்கு அது நற்செய்தியாக அவர்களின் பயிர்ச் செய்கைக்கான உந்துதலாக அது அமைந்துவிடும். ஆனால் இடையில் வரும் தேர்தலினால் அது எதிர்பார்த்த காலத்தில் கிடைக்காமல் போய் விடுவதற்கான சாத்தியமுண்டு. இருப்பினும் விவசாயிகளையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அவர்களுக்கான செலவினங்களையும் கவனத்திற்கொண்டு அரசாங்கத்தினால் வழங்கப்படவிருக்கும் ஊக்குவிப்புத் தொகை நிச்சயமாக அவர்களை தொடர்ந்தும் விவசாய செய்கையிலும் மீன்பிடியிலும் ஈடுபட ஊக்குவிக்கும். எமக்குள்ள வளங்களாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை என்பனவற்றில் அரசாங்கம் முனைப்புடன் கவனமெடுத்து அவற்றின் அபிவிருத்தியை முன்நோக்கி நகர்த்த திட்டமிட்டிருப்பது இதில் முழுமையாக ஈடுபடுகின்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

எந்தநாட்டிலும் உள்ளுர் உற்பத்தியை நலிவடைய விடக்கூடாது. அதற்காக காப்பரணாக அரசாங்கம் செயற்படுமானால் மக்கள் குறிப்பாக இளையோர் இந்தத் தொழிலில் விருப்புடன் ஈடுபடுவர். அவர்கள் எதிர்பார்க்கும் வருமானத்தை இருக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பத்தின் உதவியுடன் பெருக்க வழிவகைகள் செய்தல் அவசியமாகின்றது. விஞ்ஞான தொழில்நுட்பத்தினை கிராமத்தை நோக்கி நகர்த்துவதே இதற்கான செயற்றிட்டமாகும். விவசாய செய்கையிலீடுபடுகின்ற இளையவர்களை அந்தந்தபிரதேசத்தில் அவர்களுக்கு தேவையான தொழில்நுட்பங்களை பெற

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



ஆவண செய்தல் வேண்டும்.

கிராமசக்தியென்பது இளையவர்களின் சக்தி. இளையவர்களை விவசாய கால்நடை வளர்ப்பு குறிப்பாக கோழி வளர்ப்பு மற்றும் மீன்பிடியில் இன்னும் நாட்டமுள்ளவர்களாக இருப்பதற்கான திட்டங்கள் விரைந்து நடைமுறைக்கு வர வேண்டும். முட்டையின் விலை குறைப்பு கோழி வளர்ப்பாளர்களை முகம்சுளிக்க வைத்திருக்கின்றது. தங்களின் உற்பத்திச் செலவு விற்கும் விலையை விட அதிகமாக இருப்பதாகவும் குறிப்பாக தீவனத்தின் விலை மட்டுப்படுத்தப்படுத்தாத நிலையில் கோழி வளர்ப்பதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முனைகின்றனர். கோழி வளர்ப்பாளர்களது தீவனத்தேவை அதிகரிக்கும் போது அதன் விலையைக் குறைக்க வேண்டிய கடப்பாடும் உண்டு. இதனை உணர்ந்து மாற்று தீவன உற்பத்தி பற்றிச் சிந்திக்க வேண்டிய காலத்தில் நாம் இருக்கின்றோம்.

கறுப்புசிப்பாய் இலையான் (Black soldier fly) இனது பயன்பாட்டை நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. இந்த வகையான பூச்சிகள் சேதனக் கழிவுகளை அது தாவர மற்றும் விலங்குக் கழிவாக இருந்தாலும் விரைந்து உண்டு அதனை பிரிந்தழியச் செய்து தன்னினம் பெருக்கி விடுகின்றது. இவ்வாறு பெருகுகின்ற இந்த இலையானின் புழுக்கள் சிறந்த புரத உணவாக கோழிகளுக்கு இடப்படுகின்றது.

இதற்கும் மேலாக இதிலிருந்து புரதம் மற்றும் நொதியங்கள் பிரித்தெடுக்கப்பட்டு மனிதனுக்கு தேவையான உணவுப் பொருட்களாக மாற்றப்படுகின்றன. பூச்சி தொழில்நுட்பத்தின் முயற்சி இதுவா கும். கழிவுகளை மீள்சுழற்சி செய்வதோடு அவற்றிலிருந்து பயன்படும் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தொழில்நுட்பம் தற்போது பரவலாக பல நாடுகளில் அறிமுகமாகி அதனால் அதிக பயனையும் ஆதாயத்தையும் மக்கள் பெறத் தொடங்கி விட்டனர்.

இதுபோல விவசாயத்தில் பயன்படுத்தத் தேவையான அனைத்துத் தகவல் தொழில்நுட்பம் தொடங்கி பேண்தகு விவசாயத்தை மேன்மைப்படுத்துவதற்காக சூழலியல் விவசாயம், காலநிலை அனுசரிக்கும் தொழில்நுட்பம் இன்னும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தும் அனைத்து தொழில்நுட்பங்களில் பயன்பாடு தற்போது அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான தொழில் நுட்பங்களை மேலும் எமதுமக்கள் பெறுவதற்காகவழிவகைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

கிராம மட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு சமகால விஞ்ஞான தொழில்நுட்ப அறிவை வழங்கி அவர்களை வரும் திட்டங்களில் பங்குதாரர்களாக மாற்றினால் அதனால் விவசாயத்துறையிலும் மீன்பிடியிலும் இன்னும் கால்நடையிலும் நாம் எதிர்பார்த்திருக்கின்ற மாற்றம் ஏற்படும். இந்தமாற்றம் நாம் அனைவரும் எதிர்பார்த்ததாக எமது வாழ்வியலையும் அபிவிருத்தியையும் உயர்த்துவதற்கான குறிக்கோளை நிவர்த்தி செய்வதாக நிச்சயமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 595





இந்த பெண் யார் இவள் ஏன் கண்ணீர்விட்டு அழுகிறாள்? என்று ஒரு குரல் கேட்டது. அதற்கு என் தந்தையின் குரல், இவள் என் மகள். பிஞ்சிலே பழுத்தவளைப் போல் இவளுக்கு இப்போது சிவ பக்தி வந்து விட்டது. ஓயாமல் இப்படிக் கோவிலில் வந்து உட்கார்ந்து, கண்ணை மூடிக் கொண்டு தியானம் செய்வதும், பதிகம் பாடுவதும், கண்ணீர் விடுவதுமாயிருக்கிறாள்! என்று கூறிய மறுமொழி என் காதில் விழுந்தது.

மறுபடி நான் நிமிர்ந்து பார்த்த போது, முன்னால் நின்றவர் சிவபெருமான் இல்லை யென்றும், யாரோ அரச குலத்தவர் என்றும் தெரிந்து கொண்டேன். எனக்கு அவமானம் தாங்கவில்லை. அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடிப்போய் வீட்டை அடைந்தேன். ஆனால் என்னை ஆட் கொண்டவர் என்னை விடவில்லை. என் தந்தையுடன் எங்கள் வீட்டுக்கே வந்து விட்டார். மகனே! அவர் தான் என் கணவரும், உன் அருமைத் தந்தையுமாகிய கண்டராதித்த தேவர்!"

இவ்விதம் கூறிவிட்டுப் பெரிய மகாராணி சிறிது நிறுத்தினார். பழைய நினைவுகள் அவருடைய கண்களில் மீண்டும் கண்ணீர்த் துளிகளை வருவித்தன. கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் கூறினார்.

"பிறகு உன் தந்தையைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். அவர் சிறிது காலத்துக்கு முன்புதான் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அதுமுதல் பற் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று ஆலய தரிசனம் செய்து வந்தார். அவருக்குப் பிராயம் அப்போது நாற்பதாகியிருந்தது. இளம் வயதில் அவர் மணந்து கொண்டிருந்த மாதரசி காலமாகி விட்டார். மறுபடி திருமணம் செய்துகொள்ளும் எண்ணமே அவருக்கு இருக்கவில்லை. மீண்டும் மணம் புரிந்து கொள்வதில்லை யென்று விரதம் கொண்டிருந்தார். ஆனால் அவருடைய புனித உள்ளம் இந்தப் பேதையைக் கண்டதினால் சலனமடைந்தது. என் தந்தையின் முன்னிலையில் என் விருப்பத்தை அவர் கேட்டார். நானோ சிவபெருமானே மனித உருவங்கொண்டு என்னை ஆட்கொள்ள வந்திருப்பதாக எண்ணிப் பரவசம் கொண்டிருந்தேன். அவரை மணந்து கொள்ளப் பூரண சம்மதம் என்பதைத் தெரிவித்தேன். எங்களுக்கு விரைவில் திருமணம் நடந்தது. அதன் பயனாக உன் பாட்டனார் இழந்திருந்த செல்வாக்கை மீண்டும் அடைந்து 'மழவரையர்' என்ற பட்டப் பெயரையும் பெற்றார்."

"மகனே! எனக்கும், உன் தந்தைக்கும் திருமணம் நடந்த பிறகு நாங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வந்தோம். சிவபெருமானுடைய திருப்பணிக்கே எங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது என்றும், இருவரும் மகப்பேற்றை விரும்புவதில்லை என்றும் தீர்மானித்திருந்தோம். அதற்கு ஓர் முக்கியம் காரணம் இருந்தது. குழந்தாய்! இதையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆயினும், அத்தகைய அவசியம் நேர்ந்து விட்டதனால் சொல்லுகிறேன் கொஞ்சம் செவி கொடுத்துக் கவனமாகக் கேள்!" இவ்விதம் செம்பியன்மா தேவி கூறி மீண்டும் ஒரு நெடுமூச்சு விட்டார். மதுராந்தகனும் முன்னைக் காட்டிலும் அதிகச் சிரத்தையுடன் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கினான்.

### அத்தியாயம் 21
### "நீயும் ஒரு தாயா?"

சிவபக்தியே உருவெடுத்தாற்போல் விளங்கிய மாதரசி செம்பியன் தேவி தொடர்ந்து கூறினார்.

"மகனே! உன் தந்தை கண்டராதித்த தேவர் சிம்மாசனம் ஏறியபொழுது, சோழ ராஜ்யத்தில் ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருந்தது. உன் பாட்டனார் பராந்தகச் சக்கரவர்த்தியின் பெருமையை நீ அறிந்திருக்கிறாய். அவருடைய ஆட்சிக் காலத்தில் சோழ ராஜ்யம் தெற்கே ஈழ நாடு வரையிலும், வடக்கே கிருஷ்ணை நதி வரையிலும் பரவியது.

(தொடரும்)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## தேசிய வாசிப்பு மாத விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் யாழ்.பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதியும்



1959 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண பொது சன நூலகம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து ஆசியாவில் புகழ் பூத்த நூலகமாக இன்று விளங்குகின்றது.

இங்கு பல பகுதிகள் காணப்படுகின்றது. இவற்றிலே ஒன்றான சிறு வயதிலேயே வாசிப்புக்கு அத்திவாரம் இடும் பகுதியான சிறுவர் பகுதி காணப்படுகிறது. 29.07.2011 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் சிறுவர்களைக் கவரும் வகையிலான ஒழுங்கமைப்பில் காட்சியளிக்கும் இப்பகுதியில் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் அங்கத்தவர்களாகவும் வாசகர்களாகவும் காணப்படுகின்றனர். 6 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள் அங்கத்தவராக இணைந்து இரு புத்தகங்களை இரவல் பெற்று 14 நாட்களுக்கு பயன்படுத்த முடியும்.

தற்போது இலவச அங்கத்துவ நடைமுறையில் உள்ளது. விண்ணப்பப் படிவத்துடன் குடும்பப் பதிவு அட்டை பிரதியும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் இலவச அங்கத்துவம் பெறமுடியும்.

திங்கட்கிழமையும் பொது விடுமுறைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி - மாலை 6 மணிவரை நூலக சேவையினைப் பெறமுடியும்.

இப்பகுதியில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் 1500 இற்கும் மேற்பட்ட நூல்கள் காணப்படுகின்றன. ஜீனியர்ஸ் மதர்ஸ் பத்திரிகையும் ஏனைய சிறுவர் சார்ந்த வெளியீடுகளும் உள்ளன.

சிறுவர்களைக் கவரும் வகையில் காணப்படும் இப்பகுதிக்கு வருகை தரும் சிறார்கள் ஊக்கத்துடனும் மிகுந்த விருப்புடனும் புத்தகங்களை பயன்படுத்துவதைக் காணலாம். அத்துடன் சிறுவர்கள் விளையாடுவதற்கு தேவையான விளையாட்டுப் பொருட்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.30-12.30 மணிவரை அமெரிக்கன் கோணர் நிறுவனத்தினால் ஆங்கில மொழி ஊடான கதை நிகழ்வும் ஏனைய உற்சாகப்படுத்தும் விழிப்புணர்வு செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது.

ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் பிரிட்டன் கௌன்சில் அமைப்பினால் தரப்படும் திகதியில் வெள்ளிக்கிழமை பி.ப 3.30-4.30 மணிவரை ஆங்கில மொழி ஊடான கதை வேளையும் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகளும் நிறம்தீட்டலும் இடம்பெறுகிறது. சனிக்கிழமைகளிலும் பாடசாலை விடுமுறை தினங்களிலும் சிறுவர்களுக்கான கதைகூறலும் வரைதலும் நிறம் தீட்டல், ஒட்டுச்சித்திரம், விளையாட்டுக்கள், வாசிப்பு முகாம் செயற்பாடுகள், தொங்கு நூலக செயற்பாடுகள், கட்டாய வாசிப்பு செயற்பாடுகள், பெற்றோருடனான வாசிப்புப் படக் காட்சிகள் என பலவகையான செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

நூலகத்தைப் பார்வையிடவும் பயன்படுத்தவும் என வருகை தரும் பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிலைய மாணவர்கள், ஏனைய வாசகர்களுக்கும் கருத்துரை வழங்கும் செயற்பாடுகளும் வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளுடன் மகிழ்வூட்டும் செயற்பாடுகளும் இடம்பெறுகிறது.

வாசகர்களின் தேடல்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பான வழிகாட்டல்களும் நூல் அறிமுக நிகழ்வும் இன்று ஒரு தகவல் எனும் செயற்பாடு முகநூலின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது. இங்கு வரும் வாசகர்களுக்கான செயற்பாடுகளை ஆற்றுவதற்கு வெளியில் உள்ள பல அமைப்புக்கள் இணைந்து செயற்படுவதனை காணலாம். மேற்படி செயற்பாடுகளுடன் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் ஒவ்வொரு வருடமும் சிறப்பாக செயற்படுத்தப்படுவதனை காணலாம். பல வகையான விழிப்புணர்வு செயற்பாடுகளுடன் நடமாடும் நூலக சேவையுடன் காட்சிப்படுத்தல்கள் பேரணிகள், போட்டிகள், கருத்துரைகள், சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள், நிறைவு நிகழ்வுகள் எனத் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நீண்டு வளர்கின்றது.

முத்திரை சேகரித்தல் காட்சிப்படுத்தல், பணம் தொடர்பான காட்சிப்படுத்தல்கள், ஓலைச் சுவடிக்கான விளக்கமளித்தல் இடம் பெறும். புதிய நூல்களின் காட்சிப்படுத்தல், பூக்கள், மரம், செடி, கொடிகளின் காட்சிப்படுத்தல்கள், மூலிகைத்தாவரங்களின் காட்சிப்படுத்தல்களும் இடம்பெறுகிறது. சிறார்களின் ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டு இங்குள்ள காட்சிப்படுத்தல் பலகையில் காட்சிப்படுத்தப்படுவதும் விசேட தேவையுடைய சிறார்களுக்கான செயற்பாடுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் வாசிப்பினை விழிப்படையச் செய்வதற்கான விழிப்புணர்வு நாடகமும் அரங்க நிகழ்வுகளும் நடைபெற்று வருகிறது.

மேற்படி செயற்பாடுகள் ஊடாக சிறுவர்கள் இப்பகுதிக்கு வருகை தருவதுடன் நூல்களை இரவல் பெற்று செல்வதனையும் மகிழ்ச்சியாக வாசிப்பில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு சிறுவர் பகுதிச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து செல்வதனைக் காணலாம்.

"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"

சி.இராணி,நூலகர்,
யாழ்.பொதுசன நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நம் எண்ணங்களின் பிரதிபலிப்பே செயல்களாகவும் மற்றும் வாழ்வின் அனுபவங்களாகவும் மாறுகின்றன.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அபயத்தைக்கூட ஆளுநரால் இரத்துச் செய்ய முடியாதபோது...

வடக்கு மாகாண ஆளுநருக்கு அன்பு வணக்கம். ஆளுநர் அலுவலகத்தில் இயங்கி வரும் அபயம் என்ற பிரிவை தாங்கள் இரத்துச் செய்வதாக அறிவித்துவிட்டு பின்னர் மீளவும் அது இயங்கும் எனத் தாங்கள் அறிவித்திருப்பது அதிர்ச்சியைத் தருகிறது.

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று அபயம் மீதான அதிருப்தி.

இரண்டாவது, அபயத்தை இரத்துச் செய்வதாக அறிவித்த மறுகணமே அது இயங்கும் எனத் தாங்கள் தெரியப்படுத்தியதன் மூலம், வடக்கு ஆளுநரின் தீர்மானங்களில் வெளிச்சக்திகளின் தலையீடு இருக்கிறது என்று உணர முடிகிறது.

ஆம், இங்கு அபயம் மீதான அதிருப்தி என நாம் கூறிய விடயத்தை தாங்கள் கூர்ந்து கவனிப்பீர்கள் என நம்புகிறோம்.

உண்மையில் வடக்கு மாகாண அலுவலகத்தில் இயங்கிய அபயம் என்ற பிரிவு தங்களால் இரத்துச் செய்யப்பட்டதான தகவல் வெளிவந்ததும் அதுவிடயத்தில் பலரும் தமது மனத்திருப்தியை வெளியிட்டிருந்தனர்.

அதற்குக் காரணம் அபயம் என்ற பிரிவில் கடமையாற்றியவர்களில் சிலர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

தவிர, பாடசாலை நிர்வாகங்களில் அவர்களின் தலையீடு அதிபர், ஆசிரியர்களை அச்சுறுத்துவதாக இருந்துள்ளது.

அதேநேரம், அபயத்தில் இருந்து யார் தொலைபேசி அழைப்பை எடுத்தாலும் அதன் உண்மைத்தன்மையை ஆராயாமல், வலயக் கல்வித் திணைக்களங்கள் பதறி அடித்ததனால், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

இதனிலும் கொடுமை; அபயத்தின் இயங்கு நிலையை ஆளுநர் மேற்பார்வை செய்யாமல் விட, அங்கிருந்தவர்களில் சிலர் தங்கள் பாட்டில் தம்பட்டம் அடித்ததுதான்.

இதன் காரணமாகவே அபயம் என்ற பிரிவின் மீது பொதுமக்கள் வெறுப்புக் கொண்டனர்.

எத்தனையோ அநியாயங்கள் நடக்கின்ற போது, அது விடயங்களில் மௌனமாக இருந்த வடக்கு ஆளுநர் அலுவலகம், வடபகுதி பாடசாலை நிர்வாகங்கள் மீது நான்காம் மாடி விசாரணை போல நடந்து கொண்டமை அபயத்தின் அத்துமீறிய செயற்பாடாகவே கருதப்படுகிறது.

இதை நாம் கூறும்போது, அபயத்தின் மீது எமக்குத் தனிப்பட்ட பகைமை எதுவும் கிடையாது.

ஆனால் அபயம் ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும்.

இதைவிடுத்து முன்னைய ஆளுநரின் காலத்தில் ஆளுநர் அலுவலக ஊடகப்பிரிவு நடத்திய தர்பார் போல அபயம் இயங்குமாயின், தங்களின் நிர்வாகமும் பலயீனப்படும்.

அதேநேரம் ஆளுநர் அலுவலகத்தை சிறப்பாக வழிப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையோடு செயலாற்றுகின்ற உயர் நிர்வாகிகள் அங்கு உள்ளனர்.

அவர்களின் சிந்தனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்படும்போது வடக்கு ஆளுநர் அலுவலகம் வினைத்திறனுடன் செயலாற்றும் வாய்ப்பு உண்டென்பதும் சர்வ நிச்சயம்.

### முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், எம்.பிக்கள்

# செலவுகளை குறைப்பது தொடர்பில் அவதானம்

### அமைச்சர் விஜித ஹேரத்

முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள். எம்.பிக்கள் செலவுகளைக் குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக விசேட குழுவொன்றின் ஊடாக ஆய்வு நடத்தி, இரண்டு மாத காலத்திற்கும் அறிக்கையைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமனா விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், இதன் முடிவுகளை அறிவிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றிருந்தது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளதாவது மக்களுடைய வாக்குகளால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சம்பளம், கொடுப்பனவு, ஓய்வூதியம், உத்தியோகபூர்வ இல்லம், வாகனங்கள், பணியாட்குழாம், அலுவலக உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை வழங்குவதற்காக மக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசு குறிப்பிடத்தக்களவு செலவை வருடாந்தம் செலவு செய்கிறது.

தற்போதுள்ள அரச நிதியில் இந்த அதிகளவான செலவுகளைக் குறைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அதுதொடர்பான விடயங்களை ஆராய்ந்து திறைசேரிக்குத் தேவையற்ற செலவுச் சுமைகளை ஏற்படுத்துகின்றதும் மற்றும் தர்க்க ரீதியற்ற உரித்துக்கள், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே, இவற்றுக்கு பதிலாக மாற்று முறைகளை அறிமுகப்படுத்துவதற்குப் பொருத்தமான விதந்துரைகளுடன் கூடிய விபரமான அறிக்கையை இரண்டு மாதங்களில் சமர்ப்பிக்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சட்டம், பொதுநிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சராக பிரதமர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

### தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால்

# பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

### யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்து போகக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்தந்தை சி.ம.ப ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

நாம் ஓர் இனமாக வரலாற்றுப் பெரும் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய தருணத்தில் நிற்கிறோம். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல், தமிழ் மக்கள் மத்தியில் பெருமாற்றத்திற்கான எதிர்பார்ப்புகளை தூண்டியிருக்கின்றன.

சமகால அரசியல் கட்சிகளின் உடைவுப் போக்குகள், உட்கட்சிக் குழப்பங்கள் தீர்க்கமான அரசியல் தெளிவற்ற தன்மை போன்ற பல காரணிகளால் தமிழ் மக்களிடையே குழப்பங்களும் வேதனையும் நீடிக்கின்றன. இந்நிலை தொடருமானால் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கணிசமான அளவு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தக்கவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

"அநுர" எனும் அலையைத் தொடர்ந்து "மாற்றம்" என்பது மந்திரச்சொல்லாக பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இந்த வரலாற்றுத் திருப்புமுனையில் நின்று கொண்டு புதிய வியூகங்களை வகுக்க வேண்டியது எமது தார்மீக வரலாற்றுக் கடமையாக உள்ளது. வரலாற்று சறுக்கலை மீண்டும் ஒரு முறை நிகழவிடாது எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளை தீர்மானிக்க வேண்டும்.

எம்மிடையே இருக்கும் பிளவுகள், வேற்றுமைகள், சாதி, சமய, பிரதேசவாதங்களை தாண்டி நகரவேண்டிய இடத்தில் வரலாறு எம்மை தற்போது நிறுத்தியுள்ளது.

குறிப்பாக பாரம்பரிய அரசியல் பிரதிநிதிகள் புதிய அரசியல் போக்குக்கு இடம்விட்டு நகர்ந்து அர்ப்பணிப்புள்ள நேர்மையான ஊழலற்ற இளையோர்களை உள்வாங்கி வழிநடத்துவது பெரும் மாற்றம் ஒன்றிற்கான சிறந்த முன்மொழிவாக இருக்கும்.

மைய்யரோட்டு அரசியலைத் தாண்டி கிராம மட்ட சமூக அமைப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி வேட்பாளர்களை தெரிந்தெடுப்பது மிகச்சிறந்த நகர்வாக இருக்குமென்பதுடன்,

பால்நிலை சமத்துவம், பெண்பிரதிநிதித்துவம் குறித்தும் கருத்தில் எடுக்கவேண்டியதும் அவசியமாகும். செல்திசை தெரியாது தடுமாறும் அவலநிலையில் உள்ள தமிழ் இனத்திற்கு சரியான திசைகளைக் காட்டு வது எமது வரலாற்று கடமையென்பதை உணர்ந்து கொள்ளுவோம். தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் எமது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்துபோகக்கூடிய ஆபத்து அண்மித்துள்ள இவ்வேளையில் ஊழலற்ற நேர்மையான அரசியல் போக்குக் குறித்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு "புதிய மாற்றத்தை" வேண்டி நிற்கின்றது. நேர்மையான அரசியல் தெளிவு மிக்க ஒரு புதிய அரசியல் நகர்வை மேற்கொண்டு ஒரு தேசிய இனமாக எழுந்து நின்றால் மட்டுமே தமிழ் இனம் தன் இருப்பின் உரிமைகளுக்கான பேரம் பேசும் சக்தியாக எழுந்து நிற்க முடியும் என்பதையும் பேரன்போடு வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (ம-7)

# அபயம் நடவடிக்கை தொடர்ந்து இயங்கும்

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் செயலகத்தில் பொதுமக்கள் முறைப்பாடு மேற்கொள்ளும் அபயம் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நேற்றைய (நேற்று முன்தினம்) பத்திரிகையில் ஆளுநர் செயலகத்தால் பொது மக்களுக்கு தமது முறைப்பாடுகளை ஆளுநரிடம் நேரடியாக மேற்கொள்ளலாம் என்ற செய்தி எம்மால் அறிவிக்கப்பட்ட நிலையில் அபயம் தொடர்பான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டது என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இத்தீர்மானத்தில் மாற்றம் செய்யப்பட்டு அபயத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் இயங்குநிலையில் வைத்திருப்பது என்றும் அலுவலக நேரத்தில் மாத்திரமே முறைப்பாடுகளை முன் வைக்கக் கூடியவாறு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அபயத்தின் தொலைபேசி இலக்கம் - ABAYAM – 0706666677 பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024



மேஷம் (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - பஞ்சம ஸ்தானத்தில் புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - லாப ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - அயன சயன போக ஸ்தானத்தில் ராகு என கிரகநிலை உள்ளது.

கிரகமாற்றங்கள்: 06-10-2024 அன்று புதன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 14-10-2024 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 17-10-2024 அன்று சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 23-10-2024 அன்று செவ்வாய் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 25-10-2024 அன்று புதன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:**

இந்த மாதம் ராசியதிபதி செவ்வாய் ராசிக்கு மூன்றாம் இடமான மிதுனத்தில் சஞ்சாரம் செய்வது நன்மையை தரும். தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை.

தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். புதிய ஓடர்கள் கிடைப்பதற்கு அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவியிறக்கம் ஆகியவைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும்.

கணவன் மனைவிக்கிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவீர்கள்.

பெண்களுக்கு மனத்துணிவு அதிகரிக்கும். கலைத் துறையினருக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும்.

அரசியல்துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களை படிப்பது நல்லது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை.

**அஸ்வினி:**

இந்த மாதம் சீரான நிலை காணப்படும். அதிக சிரத்தை எடுத்தால்தான் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். ஆனால் பணப்புழக்கம் கடந்த காலத்தை விட




அதிகம் இருக்கும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்காமல் போகலாம். பெண்களுக்கு மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். திட்டமிட்டு செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். எதிர்ப்புகளை சமாளித்து முன்னேற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

**பரணி:** இந்த மாதம் பாடுபட வேண்டியிருந்தாலும் மிகவும் நன்றாக இருக்கும். மாணவமணிகள் தீவிர முயற்சி எடுத்துபடிப்பது அவசியமாகும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு விடயத்தை பெரிதாக பேசுவார்கள். கணவன் மனைவிக்கிடையே நிதானமான போக்கு காணப்படும். பிள்ளைகளின் கருத்தை அறிந்து அதற்கேற்றார் போல் செயற்படுவது நன்மை தரும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:**

இந்த மாதம் எதிர்ப்புகள் நீங்கும். தைரியம் கூடும். பணவரத்து திருப்தி தரும். எடுத்த காரியத்தை சோர்வடையாமல் தொடர்ந்து செய்து முடிப்பீர்கள்.

பேச்சு திறமையால் காரிய வெற்றிகள் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விடயங்களால் மனநிறைவு உண்டாகும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் பின்னடைவு ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. திடீர் பதற்றம் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**பரிகாரம்:**

தேவி கருமாரியம்மனை வணங்கி வர எல்லா பிரச்சினைகளுக்கும் நல்ல தீர்வு கிடைக்கும். கஷ்டங்கள் நீங்கும்;

**அதிஷ்ட கிழமைகள்: திங்கள் - செவ்வாய் - வெள்ளி ; சந்திராஷ்டம தினங்கள்: 7, 8 ; அதிஷ்ட தினங்கள்: 1, 27, 28.**

## சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும்



ரிஷபம் (கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2, பாதங்கள்)

கிரகநிலை - இராசியில் குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் புதன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - தொழில் ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - லாப ஸ்தானத்தில் ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 06-10-2024 அன்று புதன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 23-10-2024 அன்று செவ்வாய் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்; 25-10-2024 அன்று புதன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

பலன்கள்: இந்த மாதம் ராசியதிபதி சுக்கிரன் சஞ்சாரத்தால் எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் வேகம் ஏற்படும். முயற்சிகள் கைகூடும். பகைவர்களால் ஏற்படும் தொல்லைகளை சமாளிப்பீர்கள். புதிய நண்பர்களுடன் பழகும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும்.

புதிய ஓடர்களுக்கான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது.

கணவன், மனைவிக்கிடையில் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பெண்களுக்கு அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு அதிஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.

அரசியல் துறையினருக்கு தைரியம், தன்னம்பிக்கை ஏற்படும். மேலிடத்துடன் இருக்கும் [illegible] மாணவர்களுக்கு கல்வியை பற்றி பதற்றம் ஏற்பட்டு நீங்கும். பாடங்களை ஒருமுறைக்கு இருமுறை படித்து புரிந்து கொள்வது நல்லது.

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:

இந்த மாதம் மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. குடும் பத்தில் இருப்பவர்களுடன் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம்.




கணவன் - மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து பேசுவது நல்லது. தொழில் வியாபாரத் தில் ஈடுபட்டிருப்பவர்கள் திட்டமிட்டபடி செயலாற்றி வெற்றியை எட்டி பிடிப் பார்கள். வியாபார போட்டிகள் குறையும்.

**ரோகினி:**

இந்த மாதம் எதிர்பாராத செலவுகள் உண்டாகலாம். திட்டமிட்டு செயற்படுவது நல்லது. உறவினர்களுடன் தேவை யற்ற வாக்குவாதம் உண்டாகலாம். வாகனங்களால் செலவும் ஏற்படும். நண்பர்களிடம் இருந்து பிரிவு, உடல் சோர்வு உண்டாகலாம். மூத்த சகோதரர் உடல்நலத்தில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கூடுதலாக பொறுப்புகள் சேரும். கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். கவனமாக படிப்பது நல்லது. பொருளாதார சிக்கல் ஏற்பட்டு நீங்கும்.

**மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்:**

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கி விருத்தியடையும். பொருட்களை வெளியூருக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது.

பேச்சு திறமையால் காரியங்களை எளிதாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். சரியான நேரத்தில் உறங்க முடியாத சூழ்நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனகசப்பு மாறும்.

**பரிகாரம்:**

அஷ்டலட்சுமிகளையும் வணங்கி வர மனோதைரியம் கூடும். பண கஷ்டம் குறையும். குடும்பத்தில் சுபிட்சம் ஏற்படும்;

**அதிஷ்ட கிழமைகள்: புதன் - வெள்ளி; சந்திராஷ்டம தினங்கள்: 9, 10 ; அதிஷ்ட தினங்கள்: 2, 3, 29, 30, 31.**

## புதிய நண்பர்களுடன் பழகும்போது கவனம் தேவை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின்...

பழைய பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது, திடீரென வந்த மர்ம நபர் ஒருவர், தன்னை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆள் என்று அடையாளப்படுத்திக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் அச்சுறுத்தலும் விட்டிருந்தார்.

இதனால் அப்பகுதியில் குழப்ப நிலை உருவானது.

குறித்த மர்ம நபர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கலைந்து செல்லுமாறும், பணத்திற்காக வேடம் போடும் கூட்டம் நீங்கள் என்றும் கூறியதுடன் இனி புதிய அரசாங்கம். அநுரவின் அரசாங்கம். இனிமேல் இப்படியெல்லாம் செய்ய முடியாது என்றும் உடனடியாக இவ்விடத்தை விட்டுச் செல்லுமாறும் தவறின் அடிவிழும் என்றும் எச்சரிக்கை விடுத்து ஒருமையிலும் தகாத வார்த்தைகளாலும் பேசியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், குறித்த நபருடன் முரண்பாட்டில் ஈடுபட்டிருந்ததுடன் குறித்த நபர் அப்பகுதியில் இருந்து விலகிச் சென்றிருந்தார்.

மேலும் எமது கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர் என தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் உபாலி அமரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7,250)

## இலங்கை...

தரப்பு உறவுகள்மேலும் வலுவடையும் என எதிர்பார்ப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு, ரஷ்ய ஜனாதிபதி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ஸகார்யன் ஆகியோருக்கு இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது, ரஷ்ய ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இந்த கலந்துரையாடலில் விசேட கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## பொருளாதார...

ஸ்திரப்படுத்தும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமைத்துவமானது, இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்ல உதவும் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதியுடன்...

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரவிற்கு பாராளுமன்றில் எனக்கு அருகில் உள்ள ஆசனம் தான் ஒதுக்கப்பட்டு இருந்தது.

அவர் பேசுவதனை நான் ஆவலுடன் பார்த்துக்கொண்டு இருப்பேன். அவர் உற்சாகமாக பேசுவார். யாராவது குறுக்கிட்டால் அவர்களின் பின்னணி பற்றிக் கதைப்பார். அந்தளவுக்கு மற்றவர்கள் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தவர். அவர் ஒரு தடவை என்னிடம் கேட்டார். எங்களுக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என ஏன் கூறினீர்கள்.

அதற்கு நான் சொன்னேன் வடக்கு கிழக்கை பிரித்தது நீங்கள்தான் என தமிழ் மக்களுக்குத் தெரியும். அதனால் அவர்கள் உங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என். அதற்கு அவர் பாராபோம் என்றார். (ம-7)

## ரணிலை...

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணைகளைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முந்தைய விசாரணை அறிக்கைகளும் இதன்போது கவனத்தில் கொள்ளப்படும்.

திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் முன்வைக்கும் நியாயப்படுத்தல் இனி செல்லுபடியாகாது.

எனவே,அவரை விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்னாள்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது ஜனாதிபதிக்கான விடுபாட்டுரிமை கிடையாது.

அரசியலமைப்பு விலக்கு காரணமாக அவர் மீது முன்னதாக வழக்குத் தொடரப்பட வில்லை.

எனவே, தற்போது அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும் எனவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பமாகும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டதும் அதனை சர்வஜன வாக்கெடுப்பிற்காக மக்கள் முன் சமர்ப்பிப்போம் என்றார்.

மேலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வை பொறுத்த வரை புதிய அரசமைப்பை உருவாக்கி மக்களின் முன்னால் சர்வஜன வாக்கெடுப்பிற்காகச் சமர்ப்பிப்போம் என எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகத் தெரிவித்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சரவை 25க்கு மேல் இருக்காது என வலியுறுத்தினார்.

இந்த அமைச்சரவையில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் எனவும், அந்தந்த அமைச்சுக்களுக்கு இணையாக 25 பிரதி அமைச்சர்களே நியமிக்கப்படவுள்ளதாகவும் வெகுசன ஊடக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## உயர்தரப்...

உத்தேசித்துள்ளோம். பரீட்சைக்கான உரிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 5612
V 8 6 6 5 1 8
அத சம்பத
V 6 5 1 8
சீட்டிழுப்பு இலக்கம் 187
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1642
Q 36 41 56 79 Q
Double Chance 38910

மெகா பவர்
திகதி 01/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1960
M 21 23 28 31 51
11464

லக்கி 7 VIP
திகதி 2024.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 0438
X 5 6 5 9 9 9 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3854
சீட்டிழுப்பு திகதி 01.10.2024
S 09 29 30 45
S 14171

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 921
கும்பம் 12 14 40 45 கும்பம்
39207 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபர் பல் சம்பத
01.10.2024 வெற்றி வாரம் 320 வர்ணம் சிவப்பு
Z 6 2 3 4 4 3
41002
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,981,936.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2586 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 01.10.2024 தினம் செவ்வாய்
09 21 56 67 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,606,284.00
DLB

சனிதா
திகதி 2024.10.01 வெற்றி வாரம் 4747 வர்ணம் பச்சை
41 50 64 74 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,640,747.60
12295
DLB

சசிரி
வெற்றி வாரம் 535
2024.10.01
27 35 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,557,560/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4298 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.10.01 தினம் செவ்வாய்க்கிழமை
17 41 42 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,829,442.80
105103
DLB

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 33 08 39 49 61
1762
01.10.2024 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 547,915,928.20
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2412
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,999,209.60
12 22 31 42 I
430246
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (392)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



## வேலையாட்கள் தேவை

ஆவரங்காலில் உள்ள கொங்கிறீட் உற்பத்தி நிலையத்திற்கு தூண்,கல் அரிவதற்கு வேலையாட்கள் தேவை.

077 714 8146
077 783 6878 (391)


## அடிப்படை...

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பில் இன்று வருகை தரவுள்ள உயர் மட்ட குழுவுடன் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறாது. மாறாக, புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் சர்வதேச நாணய நிதிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் எவ்வாறு கொண்டு செல்லப்படும் என்பது தொடர்பான அடிப்படை விடயங்கள் மாத்திரமே கலந்துரையாடப்படும் என்றார்.

(ம-7)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியிலிருந்து 100m தூரத்தில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
02 பரப்பாகவும்
01 பரப்பாகவும்
1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். (2178)

077 836 3050/ 075 889 5625



## கொக்குவிலில் வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் பகுதியில் 2 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. நல்ல அயற்சூழல், தரகர் தேவையில்லை. (2176)

076 742 4301, 075 710 9639



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 48 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- சீரான ஆவணங்கள்.
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்.

(2179)

பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
077 623 4204 / 077 030 2523



## பணியாளர்கள் தேவை

1.வலைத்தள வடிவமைப்பாளர்கள் (WEB DESIGNERS)
2.வரவேற்பாளர் (Receptionist)
கணனி அனுபவம் உள்ளவர்கள்
(ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) (2182)

பிரஜைகள் ஆலோசனை சபை
**CITIZENS ADVISORY COUNCIL**
Tell : 077 292 8961
Email : cactamils1@gmail.com



## காணி தேவை

பூநகரி, வவுனியா, மன்னார் பகுதிகளில் காணி தேவை. (390)

தொடர்புகளுக்கு :
077 374 4652



## யாழ். நகருக்கு அருகில் காணி விற்பனைக்கு

A9 பிரதான வீதியிலிருந்து 250M தூரம் மிகவும் மலிவான விலையில் (1 பரப்பு 390.000 மட்டும்) இரண்டு, மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள் சிவபூமிக்கு மிகவும் அருகிலும், தொழிற்சாலை, புகையிரத நிலையம், சித்த மருத்துவபீடம், வங்கி, வடமாகாணசபை அனைத்தும் நடை தூரத்தில் (2177)

077 012 3075



## வேலையாட்கள் தேவை

யாழ். இந்து அருகில் உள்ள அச்சகத்திற்கு
- கணனி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் (Corel DRAW, Photoshop)
- மெசின் மைண்டர் (Kod)

அனுபவம் உள்ளவர்கள் மட்டும். பகுதி நேரம் வேலை செய்ய விரும்புவர்கள் தொடர்புகொள்ளவும். (2181)

077 250 6234



## சேவைநலன் பாராட்டு



எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக சிறப்பான சேவையாற்றி, இன்று 02.10.2024 தனது 58 வது வயதில் ஓய்வு பெறும் ஆசிரியர்

**அருட்பணி. குணவதனி பரிமளச்செல்வன்**

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் அருட் பணிகள் ஆற்றி பல்லாண்டுகாலம் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம். (2168)

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.





திக்கரை முருகமூர்த்தி கோவில்
திக்கரை - களபூமி - காரைநகர்

## ஏல விற்பனை

**பொருட்கள் விபரம்**

01. பயன்படுத்திய ஓடுகள் - 10000
02. பழைய பனஞ்சலாகைகள் - 2000
03. பழைய இரும்புக்கம்பிகள்

ஏல விற்பனை நடைபெறும் திகதியும் நேரமும்
20.10.2024 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி

P.உமாசங்கர்
அறங்காவலர்
திக்கரை முருகமூர்த்தி கோவில்
களபூமி - காரைநகர் (2172)

தொடர்புகளுக்கு:
076 527 3511, 076 644 2975



**V2 VISA SERVICES**
கனடா
077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1318)



## Care Giver - பராமரிப்பாளர்


கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1318) CIMS College
49A, Chapel Street,Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



## வாழ்த்துகின்றோம்



இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக அடிமட்டத்திலிருந்து இடதுசாரித்துவ சிந்தனையுடன் எழுந்து வந்த புதியதோர் அத்தியாயம் படைத்த இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார அதியுத்தம ஜனாதிபதி

**திஸாநாயக்க முதியான்சலாகே சண் பண்டா அனுர குமார திஸாநாயக்க**

அவர்களுக்கு நம்பிகள் நல்வாழ்வுக் கழகத்தின் புரட்சிகர நல்வாழ்த்துக்கள்

070 677 9348
நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்
இலங்கை. (2173)



## தென்னிந்திய தலயாத்திரை

12 நாட்கள் | 35+ ஆலயங்கள்

திருப்பதி, அறுபடை வீடுகள், நவக்கிரக கோயில்கள் மற்றும் பஞ்ச பூதத்தலங்கள் உள்ளடங்கலாக 35க்கும் மேற்பட்ட பிரசித்திபெற்ற ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

கட்டணத்தில் உள்ளடங்குபவை
- விசா
- இருவழி விமானப் பற்றுச்சீட்டு
- உயர்தர சைவ உணவு
- தண்ணீர்ப் போத்தல்
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- தேநீர் / பழச்சாறுகள்
- சிறப்புத் தரிசனம்

076 94 64 568 (2174)

**SRIBABY TRAVELS & TOURS**
171 - 220, Stanly Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.